வாக்குமூலம்

உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். OS. 7/2020.

வழக்கு சாட்சி PW1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பழனிசாமி | ஜாதி | |
| கணவர்/தந்தை | முத்துகருப்புதேவன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 76 |

தேதி 30.08.2024

பிரதிவாதி ஆஜர் இல்லை. வழக்கறிஞர் ஆஜர்.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

**நான் எனது** தரப்பு ஆவணங்களில் அசலினை எடுத்துவந்துள்ளேனா என்றால் இல்லை. வாதி தரப்பு ஆவணங்களில் அசல் யாரிடம் உள்ளது என்றால் என்னிடம் தான் உள்ளது. நிரூபண வாக்குமூலத்தில் நான் வழக்கு தாக்கல் செய்யவும் வழக்கறிஞர் நியமணம் செய்வதற்கும் அதிகாரம் பெற்ற முகவர் என்று அதிகார ஆவணத்தில் உள்ளதாக கூறியுள்ளதில் என்னிடம் காட்டப்படும் அதிகார ஆவணமான எ.ச.,ஆ.1ல் எங்கு கூறப்பட்டுள்ளது என்றால் குறிப்பிட்டு கூறவில்லை. அவ்வாறு குறிப்பிட்டு அதிகாரம் கொடுக்கப்படாததால்தான் அதிகார ஆவணத்தினை எனது தரப்பு ஆவணமாக குறியீடு

செய்யவில்லை என்றால் நான் நீதிமன்றத்தில் இடைக்கால மனு எண். 160/2014 தாக்கல் செய்து அனுமதி பெற்றுள்ளேன். இடைக்கால மனு எண். 160/2014த்தில் நிருபண வாக்குமூலத்தில் எ.சா.ஆ.1ன் கீழ்தான் அனுமதி கோரியுள்ளேன் என்றால் ஆமாம். இடைக்கால மனு எண். 160/2014 மூன்றாவது பத்தியில் எனக்கு வழக்கு நடந்த அனுமதியானது வழங்கப்பட்டுள்ளது என பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். வழக்கு நடத்த மட்டுமே அனுமதி உள்ளது எனவும் தனிப்பட்டு வழக்கு சொத்தின் மிது எவ்வித ஈடுபாடும் இல்லை என கூறப்பட்டுள்ளது என்றால் ஆமாம். 06,12,2013அன்று இடைக்கால மனு எண். 160/2014 தாக்கல் செய்துள்ளேன் எனறால் ஆமாம். எ.த.சா.ஆ.2 ஆவணத்தின்கீழ் தாவா சொத்தினை பொறுத்து எனக்கும் இவ்வழக்கு வாதிக்கும் கிரைய ஒப்பந்தமானது ஏற்பட்டது என்றால் ஆமாம். வழக்கு நிலுவையில்இருக்கும்பபோதே தாவா சொத்தினை நான் கிரையம் பெற்றேன் என்றால் ஆமாம். கிரையம் நான் செய்துகொண்டதை எனது முதல் நிரூபண வாக்குமூலத்தில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. நான் தவறான தகவல் நீதிமன்றத்தில் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து நீதிமன்றத்தில் தவறான உத்தரவு பெற்றுள்ளதால் 4வது பிரதிவாதி என்மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க தள்ளப்பட்டுள்ளார் என்றால் சரியல்ல. இடைக்கால மனு எண். 160/2014 ல் நான் கிரையம் பெற்ற விபரத்தினை கூறவில்லை என்றால் சரிதான். இடைக்கால மனு எண். 160/2014 4வது பத்தியில் எனது முதல்வர் வழங்கிய குறிப்பின்கீழ் வழக்கு நடத்துவதாக கூறி எ.த.சா.ஆ.2ல் அவ்வாறு கூறவில்லை என்றால் சரியல்ல. எனக்கு வழக்கு தாக்கல் செய்யவோ நடத்துவதற்கோ எனது முதல்வரான வாதி அதிகாரம் வழங்காத நிலையில் நான் அளிக்கும் சாட்சியமானது ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றால் சரியல்ல. எ.த.சா.ஆ.2 அளிக்கும்போது எனக்கு வாதி தெரியும் என்றால் இல்லை. எ.த.சா.ஆ.2 முன்னரே 6 ஆண்டுகளாக எனக்கு வாதியை தெரியும். நான் கடைசியாக வாதியை எப்போது பார்த்தேன் என்றால் 4 மாதத்திற்கு முன்பு. வா.த.சா.ஆ.2 ல் சான்றிட்ட நகலை பெற்ற முரளி என்பவரை

எனக்கு தெரியுமா என்றால் தற்போது வரை தெரியாது. முரளி என்பவர் எந்த ஆவணம் வாங்கி கொடுத்தார் என்றால் ஞாபகம் இல்லை. வா.த.சா.ஆ.2 பற்றி எனக்கு ஏதும் தெரியாது என்றாலும் தெரியாமல்தான் அதனை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் சர்வே எண். என்னவென்றால் ஞாபகம் இல்லை. தாவா சொத்து விபரத்தில் சர்வே எண். 100/1, 100/2, 95/1B3, 98/1, 99 கதிர்வேடு கிராமம் என காட்டியுள்ளோம் என்றால் ஆமாம். நான் எனது பிராதி கூறியுள்ளதுதான் தாவா சொத்து என்றால் ஆமாம். அதைதவிர வேறு சர்வே எண்களில் தாவா சொத்து கிடையாது என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள வா.த.சா.ஆ.1 முதல் 10 ஆவணங்களை பற்றி நன்கு தெரிந்த பின்புதான் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். மேற்படி ஆவணங்களை பற்றி தற்போது கேட்டாலும் எனக்கு தெரியும் என்றால் ஆமாம். வா.த.சா.ஆ.7, 9,10 ஆவணங்கள் வழக்கு தாக்கல் செய்யும்போது தாக்கல் செய்யப்பட்டது என்றால் ஆமாம். வா.த.சா.ஆ.7,9,10ல் என்ன சர்வே எண். 'கூறப்பட்டுள்ளது என்றால் 99/11. பிராது தாவா சொத்து விபரத்தில் சர்வே எண். 99/11 உள்ளதா என்றால் இல்லை. எ.த.சா.ஆ.2லும் சர்வே எண். 99/11 காணப்படவில்லை என்றால் இல்லை. 99 உள்ளது. வா.த.சா.ஆ.7,9,10 வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வாங்கப்பட்ட ஆவணங்கள் என்றால் ஆமாம். வழக்கு சொத்தின் சர்வேஎண். 99/11 என தெரிந்தபின்பும் தவறான சர்வே எண்ணுடன் தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவாவில் முறைப்படி திருத்தம் செய்யாமல் எந்த பரிகாரமும் கோரமுடியாது என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர் வழக்குரையில் படித்துபார்த்தேனா என்றால் இல்லை. எதிர்வழக்குரையில் உள்ள சங்கதிகளில் எனக்கு தெரியாது என்றால் ஆமாம். என்னுடைய வழக்கு பிராதில் தாவா சொத்தின் அனுபவத்தை பொறுத்து நான் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் ஆமாம். எவ்வித விளம்புகை பரிகாரமும் கோராமல் 4வது பிரதிவாதியிடம் தாவா சொத்தின் அனுபவம் இருந்துவரும் நிலையில் வழக்கு தாக்கல் செய்துள்ளது நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நீதிமன்ற கட்டணம் குறைவாக கட்டப்பட்டுள்ளதாக எனக்கு அறிவிப்பு அளிக்கப்பட்டுள்ளது என்றால் தெரியாது. 02,08,2022வது வருடம் குறுக்கு விசாரணையின் போது நீதிமன்ற கட்டணம் அறிவிப்பு எனக்கு அளிக்கப்பட்ட விபரம் கேள்வியாக கேட்கப்பட்டது என்றால் ஆமாம். நீதிமன்றத்திலிருந்து முறையாக அறிவிப்பு கொடுக்கப்பட்டு கால அவகாசம்

கொடுக்கப்பட்டும் நீதிமன்ற கட்டணம் செலுத்தவேண்டுமென நன்கு தெரிந்தும், பிராதில் திருத்தம் செய்யவேண்டும் என்று தெரிந்தும் நான் கட்டணம் செலுத்தாமலும், திருத்தம் செய்யாமல் இருந்து வருவதால் இவ்வழக்கானது நிலைக்கத்தக்கதல்ல என்றாலும் நான் பரிகாரம் கோர இயலாது என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.8 பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் எனது முதல்வர் கூறிதான் தெரியும் என்றால் ஆமாம். வா.த.சா.ஆ.8 முதல் தகவல் அறிக்கையில் 3,4 பிரதிவாதிகள் குற்றவாளிகள் அல்ல என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.8 நான் படித்து பார்த்தேன் என்றால் பார்த்துள்ளேன். நான் படித்துபார்க்கவில்லை என்றாலும் 3,4 பிரதிவாதிகள் குற்றவாளிகள் அல்ல என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.8ல் குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 3,4 பிரதிவாதிகள் சாட்சிகள் பட்டியளில் 2,3 சாட்சிகள் உள்ளனர் என்றால் ஆமாம். வா.த.சா.ஆ.8னை நான் முழுவதுமாக படித்துள்ளேன் என்றால் FIR மட்டும்தான் படித்தேன் முழுவதும் படிக்கவில்லை. வேண்டுமென்றே வா.த.சா.ஆ.8ல் இறுதி தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.8 எனக்கு வாதி சொல்லிதான் தெரியும் என்றால் ஆமாம். எனக்கு தாவா சொத்தின் விபரங்கள் நேரடியாக தெரியாது என்றாலும் வாதி கூறிதான் விபரங்கள் தெரியும் என்பதால் என்னுடைய சாட்சியமானது ஏற்றுகொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு விபரங்க்ள் அனைத்தும் எனக்கு வாதி சொல்லிதான் தெரியும் என்றால் ஆமாம். வழக்குக்கு முன்னரே வழக்கு விபரங்கள் வாதி கூறிதான் தெரியும் என்றால் ஆமாம். 4வது பிரதிவாதி தாவா சொத்தின் உரிமையாளர் என்றாலும் தாவா சொத்து அவரது அனுபவத்தில் இருந்து வருவதால் தாவா சொத்தின்மீது நான் எந்த உரிமையும் கோரமுடியாது என்றால் சரியல்ல. முதல் நிரூபண வாக்குமூலம் யார் தயார் செய்தது என்றால் வாதி சொல்லி வழக்கறிஞர் தயார் செய்தார். நிரூபண வாக்குமூலம் பத்தி 9ல் என்னுடைய மகளுடைய திருமணத்திற்கான வில்லங்க சான்றிதழ் தாக்கல் செய்தபோது தெரியவந்ததாக கூறப்பட்டுள்ளது என்றால் வாதியுடைய மகளுடைய திருமணத்தின்போது தெரியவந்தது. பிரமாண வாக்குமூலத்தில் கூறப்பட்டுள்ள விபரங்கள் ஏதும் என்னை சார்ந்தது அல்ல என்பதால்தான் என்னால் கூற இயலவில்லை என்றால் சரியல்ல. 5வது பத்தியில் நான் தாவா சொத்தை நான் கிரையம் செய்தததாக கூறப்பட்டுள்ளது என்றால் ஆமாம். தவறான சங்கதிகளை கூறிக்கொண்டு நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளதால் நிருபண வாக்'குமூலம் எற்கத்ததக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கிற்கு எந்தவித் முகாந்திரமும்

கிடையாததால் வழக்கானது செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. இடைநிலை இடைக்கால மனு எண். 160/2014ல் 3,4வது பத்தியில் எனக்கு தாவா சொத்தின்மீது தனிப்பட்ட முறையில் எவ்வித ஈடுபாடும் இல்லை என்று கூறப்பட்டுள்ளது என்றாலும் எனது முதல்வர் கூறியதால் தாக்கல் செய்துளளதாக கூறியுள்ளேன் என்றால் ஆமாம்.

**மறுவிசாரணை இல்லை.**